**தலைப்பு 272 - குருநாகல் மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன குருநாகல் மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 272 – குருநாகல் மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூன் 11 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக குருநாகல் மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல். | 1. | மிகை ஏற்பாடு | 2.8(அ) |
| | | 2. | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளினைப் பயன்படுத்தல். | 2.8(ஆ) |
| | | 3. | எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை செயற்திட்டங்கள் அடைந்து கொள்ளாமை | 2.3.1 |
| | | 4. | செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படாது கைவிடப்பட்டமை | 2.3.2 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக்கட்டுபாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாகவும் சேகரிப்பதற்கும் கிடைக்கபெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட | | பொதுமக்களுக்கு சேவைகளினை வழங்குவதில் குறைபாடுகள் | 2.7 |
| | | | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.5 |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அதற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும். | | |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும். | 1. புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை<br>2. பொது வைப்புக் கணக்கு | 2.11<br>2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை. | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.4 |
| 128(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | முகாமைத்துவ செயற்திறனின்மைகள் | 2.6 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு | நிலுவையாகவுள்ள கடன் மீதிகளினை அறவிடுவதற்கு தவறியமை. | |

எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல்.

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) அரச கட்டளைகளின் பிரகாரம் அரச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களின் அமுல்படுத்தலுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டலினை வழங்குதல்.

(ஆ) பிரதேச செயலகங்களின் செயற்பாடுகளுக்கான ஒருங்கிணைப்பு மற்றும் வழிகாட்டலினை வழங்குதல்.

(இ) நியதிச்சட்ட ரீதியான சட்டங்களினால் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்களினை செயற்படுத்தல்.

(ஈ) ஏனைய வரிசை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மாவட்ட முகவரொருவராக செயற்படல்.

(உ) மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை பேணுவதற்கு மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு பாதுகாப்புப் படைகளுடன் முறையானதொரு ஒருங்கிணைப்பை பேணுதல்.

(ஊ) அரச வருமானத்தை சேகரிப்பதற்கான நிலையமொன்றாக செயற்படல் மற்றும் அரச வருமானக் கணக்கீட்டு உத்தியோத்தர்களின் சார்பில் முகவரெருவராக அதனை கணக்கிடல்.

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களும் செயற்படுத்த வேண்டிய அவர்களின் செயற்பாடுகளும்

குருநாகல் மாவட்ட செயலகங்களின் கீழ் கிரிபவ, கல்கமுவ, எகட்டுவெவ, மாகோ, அம்பன்பொல, கொட்டாவெஹர, ரஸ்நாயக்கபுர, நிகவரட்டிய, பொல்பிதிகம, இப்பாஹமுவ, கனேவத்த, ரிடிகம, மாவத்தகம, மல்வபிட்டிய, குருநாகல், மஸ்பொத வீரம்புகெதர, பொல்காகவெல, அலவ்வ, நாரமல, குலியாப்பிட்டி, குலியாப்பிட்டி கிழக்கு, வாரியபொல தெற்கு, பண்டுவஸ்நுவர கிழக்கு, பண்டுவஸ்நுவர தெற்கு, பமுனகொடுவ, கொபிகன, பின்கிரிய, உதுபத்துவ மற்றும் பன்னல ஆகிய பிரதேச செயலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவகங்கள் பிரதேச மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மாவட்ட செயலகங்களின் செயற்பாடுகளினை செயற்படுத்துகின்றது.

## 2.3 உள்ளூர் நிதிகளினைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

### 2.3.1 எதிர்ப்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்திராத செயற்திட்டங்கள்

(அ) கொன்னவ பாலத்திற்கு அருகாமையிலுள்ள பமுனகொட்டுவயிலிருந்து பமுனகொட்டுவ சந்தி வரை மற்றும் பமுனகொட்டுவ சந்தியிலிருந்து திம்மாகம வரையான நீர்க்குளாய்களின் விரிவாக்கத்திற்கு 2014 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடல் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாடுகளின் மீது ரூபா 14,373,885 கிரயமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், இந்த நீர் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரகாரம், வாரியபொல நீர் சுத்திகரிப்பின் 3வது கட்டத்தின் அமுல்படுத்தல் வரை இந்த செயற்திட்டம் அமுல்படுத்த முடியாததாகக் காணப்பட்டது.

(ஆ) சனாதிபதி செயலகத்தின் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் அரசாங்க மற்றும் பயனாளிகளின் இணைப்பங்களிப்புடன் 950 ஏக்கர் நிலப்பரப்புடைய காணியில் குருநாகல் மாவட்டத்தில் பாசிப்பயிறு, கொளபி, மற்றும் நிலக்கடலையின் அறுவடைக்கு ரூபா 3,029,230 ஏற்பாடொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த ஏற்பாடும் செலவிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் யால பருவகாலம் மற்றும் 2017/2018 ஆம் ஆண்டின் மகா பருவகாலத்தின் போது 540 ஏக்கர்கள் மாத்திரம் அறுவடை செய்யப்பட்டிருந்தது. அவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 391,850 பெறுமதியுடைய 2,305 கிலோகிராம் நிலக்கடலை விதைகள் முளைத்திருக்கவில்லை என நிகவரட்டிய, கொடவெஹர, ரஸ்நாயக்கபுர மற்றும் எஹடுவெவெ பிரதேச செயலகங்களின் விவசாயிகள் முறையிட்டிருந்தனர்.

(இ) 2016 ஆம் ஆண்டில் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவத்தகமயிலுள்ள மீகொல்ல, தம்பிட்டிய கால்வாய் பாலம் மற்றும் வீதிக்கு ரூபா 340,675 செலவினமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், இந்த வீதியில் 02 வீடுகள் மாத்திரம் அமையப்பெற்றுள்ளமையினால், அரச பணம் அதிஉத்தம உற்பத்திறனுடன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் பரவலாக்கப்பட்ட மூலதன நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் பன்னல கம்மல்வத்த பிரதேசத்தில் குளாய்க் கிணறொன்றை பதிப்பதற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 375,000 ஏற்பாட்டில், ரூபா 38,517 தொகையொன்று புவிச்சரிதவியல் அளவைக்கு செலுத்தப்பட்டிருந்தது. கிணற்றின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தமையினால் அந்த செலவினம் பலனற்றதாகியது.

(உ) 100 நாட்கள் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவத்தகம பிரதேச செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட, ஹல்வஹல நீர் விநியோக திட்டத்திற்கு 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,952,281 செலவினமொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீர் பம்பியை நிறுவுவதற்கு உபஅலகுகளின் கொள்வனவுக்கு ரூபா 190,500 தொகையொன்று செலவிடப்பட்டிருக்காமையினால், செயற்திட்டம் பலனாற்றதாகியது.

(ஊ) 2016 ஆம் ஆண்டிற்கான வயம்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,850,423 செலவினமொன்று ஏற்பட்டதன் மூலம், பொல்பிதிகம நிக்கவெஹர குடிநீர் திட்டத்திலுள்ள கிணற்றின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நீர்த்தாங்கியின் நிர்மாணம், மோட்டார் அறை மற்றும் குடிநீர் செயற்திட்டத்துடன் தொடர்புடைய நீர்க்குளாய் முறைமை செய்யப்பட்டிருக்காமையினால், செயற்திட்டம் பயன்படுத்த முடியாதிருந்தமையினால் அது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டிருந்தது.

(எ) தேசத்திற்கு மகுடம் 2014 நிகழ்ச்சித்திட்ட இணக்கப்பாட்டுடன் பொல்பிதிகம, தலகொலவெவ கிராம சேவையாளர் பிரிவுகளில் ரூபா 1,244,210 தொகை மதிப்பிடப்பட்ட பெறுமதியாகக் காணப்பட்ட, குடிநீர் செயற்திட்டத்திலுள்ள கிணற்றின்

நிர்மாண வேலை பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பம்ப் வீட்டு வேலை மற்றும் மிகுதி வேலை பூர்த்தியாக்கப்பட்டிருக்காமையினால் குறித்த நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 பூர்த்தியாக்கப்பட்டிராது கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

(அ) கிராமிய உட்கட்டமைப்பு விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மகாவெவயிற்கு அருகாமையிலுள்ள பொல்பிதிகமயிலிருந்த அஹார வரையான வீதி நிர்மாணத்திற்கு ரூபா 491,510 தொகையொன்று மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டிராது கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) பின்கிரிய மானலெம்புவ கிராம சேவையாளர் பிரிவில் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கான மருத்துவமனை கட்டிட வேலைகளுக்கு கமநெகும நிகழ்ச்சித்திட்டம் - 2014 இன் கீழ் கூட ரூபா 1,500,000 செலவினமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், மருத்துவ சிகிச்சைகளினை நடாத்திச் செல்வதற்கு இயலக்கூடிய மட்டமொன்றில் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காமையினால் ஏற்பட்ட செலவினம் பயனற்றதாகியது.

### 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கணக்காய்வு பரீட்சிப்புக்களில் பின்வரும் பலவீனங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) சொத்துக்களினை ஆவணப்படுத்தல்**

2017 யூன் 28 இன் 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்தவ சுற்றறிக்கையின் பிரகாரம், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் வருகின்ற, கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் ஒவ்வொரு நிறுவகத்திடமிருந்தும் சொத்துக்கள் மீதான தகவல் அழைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் காணிகளின் தகவல் 2018 யூலை 25 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

(i) கீழே வகைப்படுத்தப்பட்ட சில சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய காலப்பகுதி | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டுகள் 1-3 | ஆண்டுகள் 3-5 | ஆண்டுகள் 5 இற்கு மேல் |
| மோட்டார் வாகனங்கள் | 04 | 01 | 01 | 02 |
| பவுசர்கள் | 02 | - | 01 | 01 |
| மோட்டார் சைக்கிள்கள் | 01 | - | - | 01 |

(ii) 2014 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்ட இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் செயற்திட்டத்தின் தரவு சேகரிப்புக்கு பன்னல

பிரதேச செயலகத்தின் கிராம சேவையாளர்களுக்கு விநியோகிப்பதற்கு ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட 09 மாதிரி படிவங்கள் மற்றும் கைவிரல் அடையாள உபகரணம் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது.

(iii) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் பன்னல, கல்கமுக, வாரியபொல, நாரமல, அலவ்வ, பொல்கஹவெல மற்றும் பண்டுவஸ்நுவர கிழக்கு ஆகிய பிரதேச செயலகங்களில் ஸ்தாபிக்கப்பட்ட விதாதா வளங்கள் நிலையங்களில் 06 மரக்கறி/பழ உலர்த்தி இயந்திரங்கள், 06 பேக்கரி அடுப்புக்கள், 05 யோகட் உற்பத்தி இயந்திரங்கள், 05 தேங்காய் உலர்த்தி இயந்திரங்கள், ஒரு ஜாஸ் - குச்சி (joss-stick) உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் தீ - மர எரிவாயு அடுப்பு என்பன 05 வருடங்களுக்கு மேலாக விளைவற்றுக் காணப்பட்டது.

(iv) பொல்பிதிகம மற்றும் நாரமல பிரதேச செயலக பிரிவுகளுக்குள் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 18 கட்டிடங்கள் மற்றும் 08 காணித்துண்டுகள், 27 ஏக்கர்கள், 04 கால் ஏக்கர்கள் மற்றும் 03 பேர்ச்சஸ் பரப்புடைய காணிகள் பயன்படுத்தப்பட்டிராது விளைவற்றுக் காணப்பட்டிருந்தது.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் செய்யப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக தோற்றின. கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) குளியாப்பிட்டி (கிழக்கு) பிரதேச செயலகத்தினால் மர அனுமதிகளினை விநியோகிக்கையில், பிரதேச செயலாளரின் அங்கீகாரமின்றி மர போக்குவரத்து அனுமதிகள் விநியோகிக்கப்பட்டிருந்தது என வழக்கொன்று காணப்பட்டது. மேலும், மரக்குற்றிகளின் போக்குவத்திற்கு அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல், போக்குவரத்து அனுமதிகளில் குறிப்பிடப்பட்ட குற்றிகளுக்கு மிகையாக மரக்குற்றிகளின் போக்குவரத்துக்கு விண்ணப்பித்த வெளிப்புற இடம் மற்றும் ஏனைய அறுக்கப்பட்ட மரங்களின் போக்குவரத்துக்கள் போன்றவற்றில் முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பண்டுவஸ்நுவர (கிழக்கு), ரிதிகம மற்றும் வீரம்புகெதர ஆகிய பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட சனாதிபதி மக்கள் சேவை - 2017 இற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் ரூபா 150,000 ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் சமுகத்திலிருந்து ரூபா 1,425,500 தொகையொன்று சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அரச கணக்குகளுக்கு எடுத்திராது செலவழிக்கப்பட்டது. ரிதிகம மற்றும் வீரம்புகெதர பிரதேச செயலகங்களில் சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து செலவிடப்படாத மீதி பணமாகக் காணப்பட்ட ரூபா 134,425 மொத்த தொகையொன்று பிரதேச செயலகத்தின் உற்பத்திதிறன் நிதி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 2.6 முகாமைத்தவ பலவீனங்கள்

கணக்காய்வு தெரிவு பரீட்சிப்புக்களில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாவத்தகம குளியாப்பிட்டி (கிழக்கு), பண்டுவஸ்நுவர (கிழக்கு), ரிதிகம, வாரியபொல, வீரம்புகெதர, உடுபத்தவ, பின்கிரிய மற்றும் பொலிபிதிகம பிரதேச செயலகங்களின் பிரதேசத்தின் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,611,358 அரச மொத்த பங்களிப்பொன்றுடன் சமுர்த்தி திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட 86 வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டங்கள் தோல்வியடைந்திருந்தது.

(ஆ) இலங்கையில் வறுமையை இல்லாதொழிக்கும் முற்போக்கான நோக்கத்துடன் சனாதிபதி செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட ‘‘கிராம சக்திக்கான மக்கள் இயக்கத்தின்’’ கீழ் வீரம்புகெதர பிரதேச செயலகத்தின் பிரதேசங்களுக்குள் விநியோகிக்க 2017 ஆம் ஆண்டில் ரூபா 492,057 பெறுமதியுடைய உபகரணங்கள் மற்றும் ரூபா 236,207 பெறுமதியுடைய பொறிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த உபகரணம் 2018 பெப்ரவரி வரையிலும் விவசாயிகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்காததுடன் கணக்காய்வில் பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்ட போது ரூபா 24,000 பெறுமதியுடைய 240 வாழை மரங்கள் மற்றும் ரூபா 20,250 பெறுமதியுடைய 450 அன்னாசி செடிகள் அழிக்கப்பட்டிருந்தது.

(இ) 29 பிரதேச செயலகங்களிலுள்ள துப்பாக்கிகளின் உரிமையாளர்களினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை துப்பாக்கிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்காமையினால், அபராதங்கள் உள்ளடங்களாக அரசாங்கத்திற்கு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 678,600 தொகையொன்று 2018 மே 02 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.7 பொது மக்களுக்கான சேவைகளினை நிறைவேற்றுதல்**

பிரதேச செயலகங்களில் இணையத்தளங்கள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், பொது முறைப்பாடுகளினை ஏற்றுக்கொள்வதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மொத்த இணையத்தளங்களில் 28 இணையத்தளங்கள் 2018 மே 02 வரையிலும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 செயற்பாடுகளினை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளினை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 5 வருடங்களின் போது மாவட்ட செயலகத்திற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பிலான தகவல்கள், பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமொன்றாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| 2013 | மீண்டெழுபவை | 1,361.90 | 1,361.90 | - | - |
| | மூலதனம் | 36.50 | 36.34 | 0.16 | 0.45 |
| | **மொத்தம்** | **1,398.40** | **1,398.23** | **0.16** | **0.01** |
| 2014 | மீண்டெழுபவை | 1,202.20 | 1,200.39 | 1.81 | 0.15 |
| | மூலதனம் | 362.25 | 359.37 | 2.87 | 0.79 |
| | **மொத்தம்** | **1,564.45** | **1,559.76** | **4.69** | **0.30** |
| 2015 | மீண்டெழுபவை | 1,547.22 | 1,540.57 | 6.64 | 0.43 |
| | மூலதனம் | 54.00 | 44.09 | 9.91 | 18.35 |
| | **மொத்தம்** | **1,601.22** | **1,584.66** | **16.55** | **1.03** |
| 2016 | மீண்டெழுபவை | 1,639.25 | 1,620.67 | 18.58 | 1.13 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மூலதனம் | 47.65 | 47.10 | 0.55 | 1.15 |
| | **மொத்தம்** | **1,686.90** | **1,667.77** | **19.13** | **1.13** |
| 2017 | மீண்டெழுபவை | 1,636.05 | 1,627.09 | 8.96 | 0.55 |
| | மூலதனம் | 68.00 | 49.29 | 18.71 | 27.52 |
| | **மொத்தம்** | **1,704.05** | **1,676.38** | **27.67** | **1.62** |

**(அ) மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை**

11 செலவின விடயங்களுக்கு ரூபா 61.81 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளில், ரூபா 42.69 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவாக, தேறிய ஏற்பாட்டிலிருந்தான சேமிப்புக்களின் வீச்செல்லை 05 சதவீதம் தொடக்கம் 36 சதவீதம் வரை காணப்பட்டது.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு**

35 ஏனைய அமைச்சுக்கள், 20 திணைக்களங்கள், 02 அலுவலகங்களினால் மாவட்ட செயலகங்களுக்கு பல்வேறு நோக்கங்களுக்கு முறையே ரூபா 8,163 மில்லியன், ரூபா 1,223 மில்லியன் மற்றும் ரூபா 47 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 9,433 மில்லியன் மொத்த ஏற்பாடொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகளில், மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 6,419 மில்லியன் மொத்த தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ரூபா 3,014 மில்லியன் ஏற்பாடொன்று அல்லது 32 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்கணக்காய்வு பரீட்சிப்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- 17 அமைச்சுக்கள், 7 திணைக்களங்கள் மற்றும் சனாதிபதி செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் 10 தொடக்கம் 99.47 சதவீதம் வரையான வீச்சினையுடைய ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 04 செயற்திட்டங்களுக்கு அவற்றை அமுல்படுத்துவதற்கு போதுமான கால அவகாசம் இன்றி தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் ரூபா 7.8 மில்லியன் மொத்த தொகையொன்று ஒதுக்கீடுசெய்யப்பட்டிருந்தது. ஆகையினால், நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து இந்த ஏற்பாடுகள் ரத்துச்செய்யப்பட்டதன் விளைவாக, இந்த செயற்திட்டங்களினை அமுல்படுத்தமுடியாதிருந்தது.

**2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 112.00 | 100.18 | 88.00 | 88.07 | 300.00 | 275.57 |

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 27201 ஆம் விடய இலக்க முற்பணங்கள் மீதான 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போதான பரிசோதனையில், 01 தொடக்கம் 18 வருடங்கள் வரையான காலப்பகுதியுடைய வீச்சில் தொடர்ந்தும் காணப்பட்ட ரூபா 744,100 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதிகள், மீளாய்வாண்டின் இறுதி வரையும் மாவட்ட செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**2.10 பொது வைப்பு கணக்கு**

2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 497.42 மில்லியனாகக் காணப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) 02 வருடங்களினை விட அதிக காலம் கடந்திருந்த ரூபா 10.59 மில்லியன் தொகையான 250 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 166 செயற்திட்டங்கள் தொடர்பில் 2015 திசெம்பர் இல் குருநாகல், பொல்பிதிகம, குளியாப்பிட்டி (மேற்கு), கல்கமுக மற்றும் ரிதிகம பிரதேச செயலகங்களினால் பொது வைப்புக் கணக்கில் ரூபா 7.03 மில்லியன் தொகையொன்று வைப்புச் செய்யப்பட்டிருந்தது. பிடிகாசை விடுத்திராது அல்லது ஏதாவது வேலையின் குறைபாடுகளினை திருத்திய பின்னர் ஒப்பந்தாரரினூடாக அவரை விழிப்படையச்செய்யாது, இந்தப் பணம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) பல்வேறு நோக்கங்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் அம்பன்பொல மற்றும் ரிதிகம பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 232,646 தொகையொன்று மற்றும் சமுதாய அடிப்படையிலான சீர்த்திருத்த திணைக்களத்தினால் பண்டுவஸ்நுவர (மேற்கு) மற்றும் இப்பாகமுவ பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 198,650 தொகையொன்று குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தபட்டிராது பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**2.11 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை**

1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.12 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.12.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் தனிநபர் ஊதியங்கள்

மேற்குறித்த 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டில் தனிநபர் ஊதியங்களுக்கு ரூபா 1,509 மில்லியன் தொகையொன்றை மாவட்ட செயலகம் செலவழித்திருந்தது. அதற்கமைய, தலா வருடாந்த மூலதனச் செலவினம் ரூபா 299,042 என குறிப்பிட்டது.

| | **ஊழியர்கள் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 136 | 129 | 07 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 72 | 40 | 32 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 4,942 | 4,594 | 348 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 312 | 284 | 28 |
| | **மொத்தம்** | **5,462** | **5,047** | **415** |

**(அ) விளைவற்ற மனித வளங்கள்**

(i) கல்கமுவ பிரதேச செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட விதாதா வள நிலையத்திற்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருக்காமையினால், அங்கு 2015 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது அவற்றிற்கான எவ்வித நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. கள ஒருங்கிணைப்பாளர் சம்பளங்கள் மற்றும் மின்சார செலவினங்களாக நிலையத்தின் செயற்பாட்டிற்கு ஏற்பட்ட ரூபா 1,245,118 மொத்த தொகையொன்று பயனற்ற செலவினமொன்றாகியது.

(ii) ரிதிகம மற்றும் மாவத்தகம பிரதேச செயலகங்கள் தொடர்பில் 2015 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதிக்கு அமுல்படுத்தப்பட வேண்டிய விவசாயத்துறை தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் கமத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட்டிருக்காமையினால், அந்த அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்ட 06 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு போதியளவான கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.